**மாகாண வீதிகள் செயற்திட்டம் - (கிழக்கு மாகாணம்) - 2015**

மாகாண வீதிகள் செயற்திட்டத்தின் - (கிழக்கு மாகாணம்) 2015 சனவரி 01 இலிருந்து ஒக்தோபர் 15 வரையான கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜிஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2010 சனவரி 11 ஆந் திகதிய 4630 எல்கே இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் 4.09(ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல், காலப்பகுதி என்பன**

மாகாண வீதிகள் செயற்திட்டத்தின் நிதி உடன்படிக்கையின் பிரகாரம் அப்போதைய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சாகிய தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் கிழக்கு மாகாணசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. முன்னேற்றகரமான வீதி உட்கட்டமைப்பின் நிலைபேறான முகாமைத்துவத்தினூடாக கிழக்கு மாகாணத்திலுள்ள சமூக பொருளாதார நிலையங்களுக்கான நுழைவாயில்களை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 2,000 மில்லியனுக்குச் சமமான யூஎஸ் டொலர் 20 மில்லியனாக இருந்ததுடன் மொத்த தொகையானது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2010 மார்ச் 31 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 மார்ச் 31 இல் பூர்த்திசெய்வதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2015 ஒக்டோபர் 15 வரை தொடர்ந்து நடைபெற்றிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 ஒக்தோபர் 15 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து உருவாகும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்

(அ) செயற்திட்டமானது 2015 ஒக்டோபர் 15 இல் முடிவடைந்த கணக்கீட்டு காலத்திற்கான முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2015 ஒக்டோபர் 15 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 ஒக்டோபர் 15 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) விசேட டொலர் கணக்கில் எஞ்சியிருந்த ரூபா 41.88 மில்லியனிற்குச் சமமான யூ.எஸ்.டொலர் 296,524 மீதி 2015 செப்தெம்பர் 29 ஆந் திகதி கடன் வழங்கும்

முகவருக்கு திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் விசேட டொலர் கணக்கின் ரூபா 39.82 தொகையான மீதி செயற்திட்டத்தின் 2015 ஒக்டோபர் 15 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றில் நடைமுறைச் சொத்தாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மல்வத்தை – சுரிப்போடை வீதியில் அமைந்துள்ள 02 பாலங்களின் நிர்மாணத்தில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரருக்கான கொடுப்பனவுகளை நிர்ணயிப்பதற்காகப் பிரயோகிக்கப்பட்ட வீதங்கள் தொடர்பான பிணக்குகள் மீதான சமாதான நீதவானின் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 40.04 மில்லியனைக் கொடுத்து தீர்க்குமாறு செயற்திட்டம் பணிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டம் மேற்கூறிய தீர்மானத்திற்காக மேன்முறையீடு செய்திருந்தது. அது தொடர்பான நிகழத்தக்க பொறுப்பு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு, 2015 ஒக்டோபர் 15 ஆந் திகதியில் உள்ளவாறான திரண்ட செலவு என்பன தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 ஒக்டோபர் 15 இல் உள்ளவாறு | |
| | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடீஏ | 20 | 2,000 | 247 | 1.44 | 192.70 | 18.91 | 2,515.90 |
| ஜிஓஎஸ்எல் | - | - | 20 | 0.01 | 1.92 | 0.10 | 14.22 |
| மொத்தம் | 20 | 2,000 | 267 | 1.45 | 194.62 | 19.01 | 2,530.12 |

### 3.2 பௌதீகச் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் ஆரம்பத் திட்டத்தின் பிரகாரம், கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாண வீதிகளில் 100 கிலோ மீற்றர்களை மேம்படுத்துவதற்கும் புனரமைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அவற்றில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள 11 மாகாண வீதிகளின் 38.35 கிலோமீற்றர்கள் மாத்திரம் செயற்திட்ட காலத்தின் போது மேம்படுத்தப்பட்டும் புனரமைக்கப்பட்டும் காட்டப்பட்டன.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல்களுக்கான பதிலின் பிரகாரம், ஈபி-08 பொதியின் கீழான கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளை காலம் போதாமையின் காரணமாக முடிவுறுத்துமாறு 2014 நவம்பர் 19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சர்வதேச

அபிவிருத்திச் சங்கம் அறிவித்திருந்தது. எனினும், கடன் வழங்கும் முகவரின் அங்கீகாரம் இல்லாது ரூபா 143.44 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஈபீ-08 பொதியின் கீழ் 03 கிராமிய வீதிகளைப் புனரமைப்பதற்கு 2014 நவம்பர் 12 ஆந் திகதியில் செயற்திட்டம் ஒப்பந்தங்களை வழங்கியிருந்தது. மேலும் வீதிப் புனரமைப்பு வேலைகளுக்கான மதியுரைச் சேவை உடன்படிக்கை 2014 நவம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்திருந்ததனால் இப்பொதியின் கீழ் புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வீதிகளின் தரம் கேள்விக்குறியாகக் காணப்பட்டது.

### 3.3 சச்சரவுத் தன்மையான விடயங்கள்

மல்வத்தை - சுரிப்போட்டை வீதியில் அமைந்துள்ள 02 பாலங்கள் நிர்மாணம் மீதான சமரச நடைமுறைகள் தொடர்பாக ஏற்படுவதற்குச் சாத்தியமான ஏதாவது செலவுகளை எதிர்கொள்வதற்கு ஈபீ-01 பொதியின் கீழ் ஒதுக்கப்பட்ட கடன் பெறுவனவுகளிலிருந்து ரூபா 132.08 மில்லியனை ஒதுக்கிவைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு 2015 யூலை 07 ஆந் திகதி பிணக்குகளை சமரசம் செய்யும் சபை அறிவுறுத்தியிருந்தது. எனினும் செயற்திட்டம் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் சமரச நடவடிக்கைகளுக்காக நிதிகளை நிறுத்திவைப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சமரச நடவடிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 2.39 தொகை செலவுசெய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.4 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பாறையிலுள்ள மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்று பொறியியலாளரின் அலுவலகத்திற்கு அரிதட்டுக்கள், மின்சார அடுப்புக்கள், அமுக்கப் பரிசோதனை இயந்திரம், அஸ்பலட் சுழற்சி இயந்திரம், மின்சாரத் தராசுகள் முதலியவாறான பல ஆய்வுகூட உபகரணங்கள் போன்றவற்றை 2015 சனவரி 26 ஆந் திகதி செயற்திட்டத்தின் மதியுரையாளரின் அலுவலகம் கையளித்திருந்தது. சம்பந்தப்பட்ட உபகரணங்கள் சொத்துக்கள் கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தின் வளவில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2015 ஒக்டோபர் 15 ஆந் திகதியில் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் முடிவுறுத்தல் நோக்கங்களிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.